[1987 ஏப்ரல் 9

குறிஞ்சிப்பாடி பெருமாள் ஏரி.

359—(* வினா எண். 5253) திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதியில் பெருமாள் ஏரியை தூர் எடுக்கவும், ஆழப்படுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை..

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறபோது இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று சொல்லிவிட்டார்கள். நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம், தென் ஆற்காட்டில் உள்ள என்னுடைய தொகுதியில் அமைந்திருக்கிற பெருமாள் ஏரியின் மூலமாக அங்கிருக்கின்ற விவசாயிகளுடைய நிலம் சுமார் 6,500 ஏக்கர் இதனால் பயன்பெற்று வருகிறது. ஆகவே அங்கேயிருக்கின்ற விவசாயிகள் பயன் பெறுகிற வகையில், மீண்டும் பரிசீலனை செய்து, இந்த ஏரியை ஆழப்படுத்தி, அங்கேயிருக்கின்ற விவசாயிகள் பயன்பெறவும், அதே சமயத்தில் அந்த ஏரியின் உள் பக்கத்தில் இருக்கிற ஆழ்வாரிகள் கடந்த 1975 ஆம் ஆண்டு சரிந்து போய்விட்டன. இதையும் மீண்டும் பரிசீலனை செய்து, விரைவான நடவடிக்கை எடுத்து இந்த விவசாயிகள் பயன் பெறுவதற்கான வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ் ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரியை ஏற்கெனவே ஆழப்படுத்த முடியாமல், அதன் கரையை ஒரு அடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதன் மூலமாக முன்பு இருந்ததைவிட 25 சதவீதம் அளவிற்கு கொள்ளளவு கூடி இருக்கிறது. ஆகவே தற்போது வேண்டியதில்லை என்று அதிகாரிகள் முடிவு செய்திருக்கிறார்கள். ஆனால் உறுப்பினர் அதை

1987 ஏப்ரல் 9]

மறுபடியும் ஆழப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குரிய ஆய்வுகளை நடத்துவதற்கு வேண்டிய உத்தரவுகளை அரசாங்கம் எடுக்கும். அதேநேரத்திலே பழுதுபட்டிருக்கிற அந்தக் கால்வாய்களையெல்லாம் சீரமைப்பதற்கு வேண்டிய முயற்சிகளையும் அரசு எடுக்கும்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் பரிசீலனை செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மிகவும் நன்றி. அதே சமயத்தில் அந்தப் பெருமாள் ஏரிக்கு வரக்கூடிய நீர் வரத்து வாய்க்கால் பரவனாறு வழியாகத்தான் பெருமாள் ஏரிக்கு வரத்து வருகிறது. பரவனாறின் இருபுறமும் கரைகள் இல்லாத காரணத்தாலே, இருபுறமும் உள்ள கிராமங்களில் உள்ள மக்கள், சுமார் 20 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மழைக் காலங்களிலும் வெள்ளக்காலங்களிலும் பாதிக்கப்பட்டு வெளியேறுகிறார்கள். அதுமாத்திரமல்ல, நெய்வேலி காட்டாமணிச் செடிகளும் அந்த வாய்க்காலை அடைத்து இருக்கின்றன. ஆகவே இரண்டையும் தவிர்க்கிற வகையில் புதிதாக அணையை ஏற்படுத்தியும் அந்த நெய்வேலி காட்டாமணியை அப்புறப்படுத்துவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய உணர்வை நான் புரிந்து கொண்டேன். அப்படி கரைகள் பலவீனமாகவும், மோசமாகவும் இருக்கின்ற பொழுதெல்லாம் அதை ரிப்பேர் செய்வதற்கும், காட்டாமணி செடிகளை யெல்லாம் அப்புறப்படுத்துவதற்கும் வேண்டிய முயற்சிகளை யெல்லாம் அரசாங்கம் மேற்கொள்ளும்.

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியத்தில் திருமலைராஜன் ஆற்றில் ரெகுலேட்டர்.

360—(* வினா எண். 7559) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியத்தில் புதுபாகசாலை கிராமத்தில், திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டர் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?